தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தமிழ்நாடு அரசின் நிதியுதவியோடு நடைபெறும் தொழில்முனைவோருக்கான நிலஎழிலூட்டுதல் மற்றும் மலர் சாகுபடி பயிற்சி

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தோட்டக்கலைக் கல்லூரியைச் சார்ந்த மலரியல் மற்றும் நிலஎழிலூட்டும் துறையின் சார்பில், நில எழிலூட்டுதல் மற்றும் மலர்சாகுபடி குறித்த பயிற்சி 8-12-2015 முதல் 31-12-2015 வரை 21 நாட்கள் நடைபெற்றது. நில எழிலூட்டுதல் மற்றும் வணிக மலர்சாகுபடியில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு நடைபெறும் இப்பயிற்சிக்கு தமிழ்நாடு அரசின் சென்னை தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (Entrepreneurship Development Institute) நிதியுதவி வழங்கியது.

இப்பயிற்சியை கோவை மாவட்ட தோட்டக்கலை இயக்குநர் திரு. A. இராமகிருஷ்ணன் 8-12-2015 அன்று தொடங்கி வைத்தார். இப்பயிற்சியல் முப்பது தொழில் முனைவோர் பங்கேற்று பயன்பெற்றனர். கடந்த 21 நாட்களாக நடைபெற்ற இப்பயிற்சியில் மலரியல் மற்றும் நிலஎழிலூட்டுதலின் முக்கியத்துவம் மற்றும் தொழில் வாய்ப்புகள், மலர்களுக்கான நாற்றங்கால் தொழில் நுட்பங்கள், உதிரி மற்றும் கொய்மலர் சாகுபடி தொழில் நுட்பங்கள், தோட்டமிடலின் சிறப்பு வகைகள், மலர்ச்செடிகளின் பயிர்ப்பெருக்க முறைகள், மாடித்தோட்டம் அமைத்தல், நில எழிலூட்டலின் கூறுகள் மற்றும் வடிவமைப்பு, போன்சாய் வளர்ப்பு, திசுவளர்ப்பு முறையில் அழகுச் செடிகள் மற்றும் மலர்ச்செடிகள் உற்பத்தி, அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பங்கள், மலர்ச்சாகுபடிக்கான வரவு மற்றும் செலவினை கணக்கிடுதல், பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்கள், மண்புழு உரம் தயாரிப்பு, நுண்ணுயிர் உரம் தயாரிப்பு, மலர்ச்செடிகள், பனைவகைத் தாவரங்கள், பெரணிகள், வீட்டினுள் வளரும் செடிகள், தழைச்செடிகள் உள்ளிட்டவற்றை இனம் காணல், நிலஎழிலூட்டுதலின் வடிவமைப்பு மற்றும்

அடிப்படைக் கோட்பாடுகள், தோட்டங்களில் வளர்க்கும் செடிகள், உலர் மலர் உற்பத்தி முறைகள், புல்வெளி அமைக்கும் முறைகள், வீட்டினுள் தோட்டம், செங்குத்துத் தோட்டம் அமைத்தல், செடி அல்லாத வடிவமைப்புகளை அமைத்தல், வங்கிக் கடனுதவி பெற திட்டங்களை தயார் செய்தல், மலரியல் மற்றும் நிலஎலூட்டுதல் கலையில் இயந்திரங்களின் பங்கு, மலர் அலங்காரம் மற்றும் பூச்செண்டு உருவாக்குதல், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து விளக்கமும் பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும் கோவை மற்றும் மேட்டுப்பாளையம் பகுதிகளில் வணிகரீதியாகச் செயல்படும் அழகுச் செடிகள் உற்பத்தி நாற்றுப் பண்ணைகளுக்கும் பயிற்சியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின் மூலம் முகாமில் பெற்ற பயன்கள் குறித்து சில பயிற்சியாளர்கள் எடுத்துரைத்தனர். நிறைவு விழாவில் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர். H. பிலிப் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்களையும் பாடங்கள் குறித்த குறுந்தகட்டினையும் வழங்கினார். பயிற்சியின் அம்சங்களை மலரியல் மற்றும் நிலஎழிலூட்டுதல் துறைத் தலைவர் முனைவர். மா. கண்ணன் விரிவாக எடுத்துரைத்தார். முன்னதாக தோட்டக்கலை முதல்வர் பொறுப்பு முனைவர். R.M. விஜயகுமார் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

தோட்டக்கலைத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ம. கங்கா அவர்கள் நன்றி உரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்